**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**EP No.03/2024**

**மனுதாரர் தரப்பு சாட்சி–1 பாப்பாத்தி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) நான் எதற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது நிலம் எனக்கு வேண்டும் என கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எப்போதிலிருந்து எனது நிலம் என்னிடம் இல்லை என்றால், 2023ம் வருடத்தில் இருந்து என்னிடம் இல்லை. சாட்சி மீண்டும் நிலம் தன்னிடம் இருப்பதாகவும், அதில் விவசாயம் செய்ய சென்றால் எதிர்மனுதாரர்கள் தன்னை தாக்க வருவதாகவும் கூறுகிறார். எப்போது மேற்படி சம்பவம் நடந்தது 17.06.2023 ல் இருந்து இம்மனு சொத்தில் நான் இறங்கவில்லை. நான் இச்சம்பவம் சம்பந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். எனது நிறைவேற்று மனுவில் 17.06.2023ல் எதிர்மனுதாரர்கள் பிரச்சினை செய்ததாக கூறியுள்ளேனா என்றால் இல்லை, தற்போதுதான் கூறிகிறேன்.

2) நான் யாரிடம் புகார் கொடுத்தேன் என்றால், குளித்தலை காவல் நிலையத்திலும், கரூர் மாவட்ட கண்காணிப்பாளரிடமும் புகார் கொடுத்தேன். எப்போது புகார் கொடுத்தேன் என்றால் 13.06.2023ல் கொடுத்தேன். மேற்படி புகார் பற்றி நிறைவேற்று மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது சாட்சியத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், நிறைவேற்று மனுவிற்காக காவல்துறையில் புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிலத்தில் ஆட்கள் வைத்து வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான், நானும் அவ்வப்போது நிலத்திற்கு செல்வேன். எனது நிலத்தில் வேலை செய்த ஆட்களுக்கு மேற்படி சம்பவம் குறித்து தெரியுமா என்றால் தெரியும். மேற்படி

நபர்களை விசாரித்தால் உண்மை தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர்களின் பெயர், விலாசம் தெரியுமா என்றால் தெரியாது.

3) நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்காததால்தான் நான் அவர்களின் பெயர், விலாசம் தெரியவில்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் பணி செய்த ஆட்களின் பெயர், விலாசம் தெரியாது என கூறுவது நம்பத்தகுந்ததாக இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 புகாரை யார் தயார் செய்தது என்றால் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். ம.சா.ஆ.3 புகார் சம்பந்தமாக நான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 புகார் இம்மனுவிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 புகார் பற்றி மனுவில் குறிப்பிடாமல் எனது சாட்சியத்தில் முதல் முறையாக தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். மனுவில் குறிப்பிடாத சங்கதிகள் குறித்து சாட்சியம் கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4) எதிர்மனுதாரர் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் எந்த வகையிலும் நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. நிறைவேற்று மனுவை எதிர்மனுதாரர்கள் எந்த தேதியில், எந்த வகையில் நீதிமன்ற தீர்ப்பை அவமதிப்பு செய்தார்கள் என்று குறிப்பிட்டு கூறாததால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மனுவில் எவ்வித காரணமும் குறிப்பிடாமல் எதிர்மனுதாரர்களை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று மட்டும் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். இம்மனுவிற்கு ஆதரவாக பிரமாண பத்திரிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**EP No.03/2024**

**மனுதாரர் தரப்பு சாட்சி–2 லதா –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 07.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) நான் ம.சா.1 ன் மகள். எனக்கு திருமணமாகி 30 வருடங்கள் ஆகிறது. 30 வருடங்களாக எனது கணவருடம் வசித்து வருகிறேன். நான் அசல் வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கின் விபரங்கள் யார் மூலமாக எனக்கு தெரியும் என்றால் எனது தாயார் சொல்லி தெரியும். இந்த மனுவின் விபரமும் எனது தாயார் சொல்லித்தான் தெரியுமா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் எனது முதல் சாட்சிய விசாரணை வாக்குமூலம் எனது தாயார் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு நேரடியாக மேற்படி சம்பவம் குறித்து தெரியுமா என்றால் தெரியும். காவல்துறையில் நான் ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால், நானும் எனது தாயாரும்தான் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 புகார்தான் நாங்கள் கொடுத்தது என்றால் ஆமாம், அதில் சம்பவத்தின் போது நானும் உடன் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2) சம்பவத்தின் போது எனது தாயாரும், பெரியம்மாவும் இருந்தார்கள். எனது பெரியம்மா சொல்லி நான் வந்தேன். எனக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது என்றும், ம.சா.1 எனது தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கில் தீர்ப்பான விபரம் தெரியுமா என்றால், நிலம் பெரியம்மாள், பாப்பாத்தியுடையது என தீர்ப்பானது. நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எனது முதல் சாட்சியத்தில் கண்டுள்ள சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் எந்த காலத்திலும் நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**